இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 24.03.2026

# போரை முடிவுக்குக் கொண்டு வருக!

ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் போர் குறித்து பிரதமர் மோடி தலைமையில் ஒன்றிய அமைச்சரவைக் கூட்டம் ஆலோசனை நடத்தி உள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் கூட்டம் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஈரான் போர் பாதிப்பு குறித்து விரிவான ஆலோசனை நடைபெற்றுள்ளது.

போர் காரணமாக ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு காரணமாக உரத் தொழில் சாலைகளில் உற்பத்தி குறைந்துள்ளது. உரம் உற்பத்தி குறைந்துள்ள நிலையில் வரும் சாகுபடி காலத்தில் விவசாயிகளுக்கு மாற்று உரம் உறுதி செய்வது குறித்து அமைச்சரவைக் கூட்டம் ஆலோசனை நடத்தி உள்ளது. அதே போன்று எரிவாயு பயன்படுத்தும் தொழில் சாலைகளுக்குத் தொடர் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. நாட்டில் அவசியமான, முக்கியப் பொருள்களின் பதுக்கல் ஏற்படாமல் தடுப்பது உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

**ஈரான் அதிபருடன் பிரதமர் மோடி அவர்கள் பேசி இருக்கிறார்கள். ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியானுக்கு ரமலான் வாழ்த்துத் தெரிவித்த பிரதமர் மோடி, உள்கட்டமைப்புகள் மீதான தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். மேற்கு ஆசியாவில் போர் நடைபெற்று வரும் சூழலில் இந்தியக் கப்பல்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்றாலும் மற்ற நாட்டுக் கப்பல்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் இந்தியாவையும் பாதிக்கிறது. இதுவரை இரண்டு முறை ஈரான் அதிபருடன் இந்தியப் பிரதமர் பேசி இருக்கிறார்.**

**ஈரான் அதிபருடன் பேசிய இந்தியப் பிரதமர் அமெரிக்க அதிபரிடம் பேச வேண்டாமா? இஸ்ரேல் நாட்டுத் தலைவருக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டாமா?**

**உண்மையில் போரைப் பற்றி விரிவான ஆலோசனையை ஒன்றிய அமைச்சரவை செய்திருக்க வேண்டும். விளைவுகளைப் பற்றி அவர்கள் பேசி இருக்கிறார்கள். காரணத்தை தடுக்கும் கடமையும் இந்தியாவுக்கு இருக்கிறது. ஏனென்றால், இந்தப் போர் மிக மோசமானதாகப் போய்க் கொண்டு இருக்கிறது.**

ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் தாக்குதல் நடத்தியது. அதற்குப் பதிலடியாக ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. உலகின் கச்சா எண்ணெய் போக்குவரத்துக்கு அதிகம் பயன்படுத்தப்படும் கடல் வழித் தடங்களில் ஒன்றான ஹோர்முஸ் நீரிணையை மூடிவிட்டது ஈரான். இதுதான் எரிவாயு நெருக்கடிக்குக் காரணம் ஆகும். இதனை எரிவாயு நெருக்கடியாக மட்டும் பார்க்கக் கூடாது. எரிவாயு நெருக்கடியை விட மோசமானது போர். அந்தப் போரை நிறுத்துவதற்கான முயற்சிகளை இந்திய அரசு வெளிப்படையாக எடுக்க வேண்டும்.

எரிவாயு நெருக்கடி மட்டுமல்ல; போர் நெருக்கடியும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அதுதான் உண்மை.

**ஈரான் நாட்டைச் சேர்ந்த போர்க் கப்பல், இங்கு விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற சர்வதேச கடற்படை பயிற்சியில் பங்கேற்றது. அப்பயிற்சியை முடித்துவிட்டு ஈரான் நாட்டுக்கு அக்கப்பல் திரும்பிக் கொண்டு இருந்தது. இந்தியப் பெருங்கடலில் இலங்கைக்கு அப்பால் ஈரான் போர்க்கப்பல் சென்று கொண்டிருந்த போது அதனை அமெரிக்கா தனது நீர்மூழ்கிக் கப்பல் மூலம் தாக்கி மூழ்கடித்தது. இந்த மார்ச் மாதத்தின் தொடக்கத்தில் தான் இது நடந்தது. இது மிகமிக மோசமான செயல் அல்லவா?**

இதற்குப் பதிலடியாக இந்தியப் பெருங்கடலில் உள்ள அமெரிக்க - பிரிட்டன் கூட்டு விமானத் தளமான டியாகோ கார்சியாவை நோக்கி ஈரான், 2 ஏவுகணைகளை வீசி உள்ளது. ஈரானில் இருந்து 4 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் தளத்தை குறி வைத்து உள்ளது. எந்தளவுக்கு அதி நவீன ஆயுதங்கள் இப்போரில் பயன்படுத்தப் படுகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம். போர் விரிவடைவதன் அடையாளமாகவும் இதனை நாம் பார்க்க வேண்டும்.

ஈரான் நடான்ஸ் பகுதியில் உள்ள அந்த நாட்டின் அணுசக்தி மையம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் அணு ஆராய்ச்சி மையம் அருகே ஈரான் தாக்குதல் நடத்தி இருக்கிறது. இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பை ஊடுருவி இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 'எங்கள் ஏவுகணைகளை இஸ்ரேலால் இடைமறிக்க முடியவில்லை' என்று ஈரான் சொல்லி இருக்கிறது.

**ஹோர்மூஸ் நீரிணையைத் திறக்க ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் 48 மணி நேரக் கெடு விதித்துள்ளார். 48 மணி நேரத்துக்குள் திறக்காவிட்டால் ஈரானின் மின் உற்பத்தி நிலையங்களை அழித்துவிடுவோம் என்றும் மிரட்டி இருக்கிறார் டிரம்ப்.**

ஈரான் போரின் இறுதி இலக்குகளை நெருங்கி விட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். 'போர் இப்போதைக்கு முடிவுக்கு வராது' என்று இஸ்ரேல் ராணுவத் தளபதி இயல்ஜமீர் சொல்லி இருக்கிறார். 'இஸ்ரேல் வெற்றி பெறும் வரை போர் நீடிக்கும்' என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

**எங்கோ நடக்கும் போர் என்று வேடிக்கை பார்க்க முடியாது. இது இந்தியாவையும் பாதிக்கும் போராக மாறுவதற்கு முன் தடுத்து நிறுத்தும் கடமை ஒன்றிய அரசுக்கு இருக்கிறது.**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (23.3.2026) காலை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.



புனித ரமலான் பண்டிகையையொட்டி கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் இல்லத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தனது குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## அனைத்து வாக்குச்சாவடிகளிலும்

# வாக்காளர்களுக்கான வசதிகள் குறித்து கண்காணிக்கப்படும்!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

சென்னை, மார்ச்.24-

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கண்காணிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வாக்காளர்களுக்கு வசதிகள் தமிழ்நாடு, கேரளா உள்பட 5 மாநிலங்களில் நடக்க உள்ள தேர்தல்களுக்கான அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 15ஆம் ந்தேதி அறிவித்தது.

இதில் உள்ள 2 லட்சத்து 18 ஆயிரத்து 807 வாக்குச்சாவடிகளுக்கு ஓட்டுபோட வரும் வாக்காளர்களுக்கான வசதிகள் மற்றும் ஓட்டுப்பதிவு அன்று வாக்காளர்களுக்கு தேவையான உதவிகளை செய்துதர மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

**குடிநீர் வசதி!**

குறிப்பாக குடிநீர், நிழலுடன் கூடிய காத்திருப்பு பகுதி, தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை, போதிய வெளிச்சம், மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்ககான முறையான சாய்வுதளம். தரப்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு அறை மற்றும் முறையான வழிகாட்டி பலகைகள் ஆகியவை அடங்கும். வாக்காளர்கள் தங்களது முறைக்காக காத்திருக்கும் போது அமருவதற்கு ஏதுவாக, வரிசையில் குறிப்பிட்ட இடை வெளிகளில் பெஞ்சுகள் அமைக்கவும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

வாக்காளர் விழிப்புணர்வை வலுப்படுத்த, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 4 சீரான மற்றும் தரப்படுத்தப்பட்ட வாக்காளர் வசதி சுவரொட்டிகள் முக்கியமாக காட்சிப்படுத்தப்படும். இந்த சுவரொட்டிகளில் வாக்குச்சாவடி விவரங்கள், வேட்பாளர் பட் டியல், செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை, அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்களின் பட்டியல் மற்றும் வாக்குப்பதிவு நடைமுறை ஆகியவை இடம்பெற்றிருக்கும்.

**வாக்குச்சாவடியில் உதவி மையங்கள்!**

வாக்காளர்கள் தங்களின் வாக்குச்சாவடி எண் மற்றும் அந்தந்த சாவடியின் வாக்காளர் பட்டியலில் உள்ள வரிசை எண்ணைக் கண்டறிய உதவுவதற்காக, ஒவ்வொரு வாக்குச்சாவடி அமைவிடத்திலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (பி.எல்.ஒ.) அதிகாரிகள் குழுவுடன் கூடிய வாக்காளர் உதவி மையங்கள் அமைக்கப்படும். வாக்காளர்கள் வாக்குச்சாவடி வளாகத்தை நெருங்கும்போது எளிதில் தெரியும் வகையில் இந்த உதவி மையங்கள் முக்கிய வழிகாட்டி பலகைகளைக் கொண்டிருக்கும். வாக்காளர்களின் வசதிக்காக தேர்தல் ஆணையம் எடுத்துள்ள பல முயற்சிகளில் ஒன்றாக, வாக்குச்சாவடி நுழைவாயிலுக்கு வெளியே வாக்காளர்களுக்கான செல்போன் வைப்பு அறை வசதி வழங்கப்படும். வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்குள் நுழைவதற்கு முன் தங்களது செல் போனை (அணைக்கப்பட்ட நிலையில்) நியமிக்கப்பட்ட தன்னார்வலரிடம் ஒப்படைத்து விட்டு, வாக்களித்த பிறகு அதனைப் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் இவை கண்டிப்பாகப் பின் பற்றப்படுகிறதா? என்பது கண்காணிக்கப்படும். மேற்கண்ட தகவல்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை இயக்குனர் ப.பவன் தெரிவித்துள்ளார்.

**ஜனநாயக கடமை!**

இதற்கிடையே தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சிறப்பு தீவிர திருத்தம் முடிவடைந்த பின்னர் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் வாக்காளர் பெயர் இடம் பெற்றிருந்தால் மட்டுமே நடக்க இருக்கும் சட்டசபை தேர்தலில் வாக்களிக்க முடியும். பெயர் விடுபட்டு இருந்தால் பெயர் சேர்க்க வருகிற 26ந்தேதி வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி தகுதியானவர்கள் அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்து, வாக்களிக்கும் ஜனநாயக கடமையை தவறாது நிறைவேற்ற வேண்டும். வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்க்க voters.eci. gov.in மற்றும் www.elections.tn.gov. in என்ற இணையதள முகவரி அல்லது ECINet செயலியை பார் வையிடுவதன் மூலம் தகவல்களை அறிந்து கொள்ள முடியும். இதுதவிர 1950 என்ற கட்டண மில்லா வாக்காளர் உதவி எண்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்பாட்டு பரிமாற்ற ஒப்பந்தங்கள் –

# வெளிநாட்டு அகழாய்வு முயற்சிகளின் நிலை என்ன?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச். 24–

தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன் மக்களவையில் கலாச்சார அமைச்சகத்திடம் பண்பாட்டு பரிமாற்ற ஒப்பந்தங்கள் மற்றும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

அதாவது, கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்தும் வகையில் பண்பாட்டு பரிமாற்ற ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

மேலும், கடந்த 10 ஆண்டுகளில் இந்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் கலை வரலாற்றாளர்கள் வெளிநாடுகளில் மேற்கொண்ட ஆய்வு முயற்சிகளின் விவரங்கள் என்ன? இத்தகைய ஆய்வுகளுக்காக போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? என்ற கேள்விகளை முன்வைத்தார்.

இதற்கு ஒன்றிய கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சர் கஜேந்திர சிங் சேகாவத் பதில் அளித்தார்.

அந்த பதிலில்:

இந்திய கலாச்சார அமைச்சகம் கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் உள்ளிட்ட மொத்தம் 115 நாடுகளுடன் பண்பாட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இவ்வொப்பந்தங்களின் மூலம் பண்பாட்டு பரிமாற்ற திட்டங்கள் (Cultural Exchange Programmes – CEPs) செயல்படுத்தப்பட்டு, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், வரலாற்று சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் புதுப்பிப்பு பணிகளுக்காக, இந்திய தொல்பொருள் ஆய்வு துறை ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டின் கீழ் ஆய்வு குழுக்களை பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வருகிறது.

ஆனால், இந்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் கலை வரலாற்றாளர்கள் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் ஆய்வு முயற்சிகளுக்காக தனியாக தனித்த நிதி ஒதுக்கீடு இல்லை.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் +2 மாணவி படுகொலை செய்யப்பட்டு உயிரிழந்தார். உயிரிழந்த மாணவியின் குடும்பத்தாரை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது அமைச்சர் பெ.கீதாஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் மற்றும் ஒன்றியச் செயலாளர் காசி விஸ்வநாதன், கிழக்கு ஒன்றிய தேர்தல் பார்வையாளர் சோலையப்பன், இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், எப்போதும் வென்றான் சோலைசாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் முத்துக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.